**30.06.2026**

அ.வ.எண்.**165/2017**

<u>வா.சா.**3** மரியம்மேக்சிமி, **2**ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

**1**. வா.சா.ஆ.**1** ஆவணத்தில் உள்ள கையொப்பம் வேறு, எனது பிரமாணவாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் வேறு என்றால் **2010**ம் ஆண்டுதான் வா.சா.ஆ.**1** ஏற்பட்டது, அப்போது நான் அப்படிதான் கையொப்பம் செய்வேன், தற்போது கல்லூரி முடித்த பிறகு என்னுடைய கையொப்பத்தை மாற்றிவிட்டேன். **2010**ம் வருடம் எனக்கு **20** வயதிருக்கும். வா.சா.ஆ.**1** ஆவணத்தில் உள்ள கையொப்பமும், எனது பிரமாணவாக்குமூலத்தில் உள்ள கையொப்பமும் வேறு வேறு, நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.**1** எங்கு, எப்போது ஏற்பட்டது என்றால் **2010**ம் வருடம் மதுராந்தகம், சார்பதிவாளர் அலுவலகத்தில் ஏற்பட்ட ஆவணம், அப்போது நானும் உடனிருந்தேன்.

**2**. இந்த வழக்கு யார் யார் மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் பிரதீப்குமார் என்பவர் தேவதாஸ் மற்றும் தேவசகாயம் மீது தாக்கல் செய்துள்ளார். வாதி பிரதீப்குமார் என்பவர் எனது உடன்பிறந்த தம்பி என்றால் சரிதான். தாவாசொத்துகளை எப்போதுமே நான் அனுபவிக்கவில்லை, **2**ம் பிரதிவாதி தற்போது அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. குடும்ப பாகபிரிவினை மற்றும் கூர்சீட்டு நடந்ததாக எனது பிரமாணவாக்குமூலத்தில் கூறியுள்ளேன் அவ்வாறு எந்த பாகபிரிவினையும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எனக்கு அதன் விவரம்

நேரடியாக தெரியாது என்றால் சரிதான், கூர்சீட்டு பாகபிரிவினை பற்றி கேள்விப்பட்டேன்.

3. மேற்சொன்ன கூர்சீட்டு பாகபிரிவினையில் பிரதிவாதிகள் யாரும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவாசொத்துகளை வாதி மட்டும் தனியாக அனுபவிக்கவில்லை, பிரதிவாதிகளும் சேர்ந்து அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல, வாதிதான் அனுபவித்து வருகிறார். எனக்கு வழக்கின் விவரங்கள் தெரியாமல் எனது தம்பி வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.